(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 34.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2009, ஒற்றோபர் 20, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0158 / '09

1.

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சூரியவெவ மகாவலி புதிய அபிவிருத்தி வலயத்துக்குள் 2004 தொடக்கம் 2009.03.31 வரை காணித்துண்டுகள் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வருடாந்தம் எவ்வளவு என்பதையும்,

(ii) காணித்துண்டுகள் வழங்கப்பட்டோர் தெரிவு செய்யப்பட்ட எடுகோல்கள் மற்றும் வழங்கப்பட்ட மொத்த காணியின் அளவு மேட்டுநிலம் / நீர்ப்பாசன காணிகள் என்ற ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iii) தகமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் காணிகள் வழங்கப்படாதவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இந்த சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தனிப்பட்ட தொழில் முயற்சிகளுக்காக கம்பெனிகள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், அதற்கு விண்ணப்பித்த கம்பெனி / நிருவனத் தலைவரின் பெயர் மற்றும் முகவரி என்ன என்பதையும்,

(iii) அந்தக் காணிகளை வழங்க இருக்க வேண்டிய தகமைகள், எடுகோல்கள், காணிகள் வழங்கப்பட்ட திகதி, மற்றும் வழங்கப்பட்ட காணியின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) வழங்கப்பட்ட காணிகள் எந்தெந்த நடவடிக்கைகளுக்கு எந்தக் கால வரையறை வரை வழங்கப்பட்டன என்பதையும்,

(v) அந்த காணிகள் குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப் பட்டுள்ளனவா என்பதையும்,

(vi) அதன் தற்போதைய நிலமை என்ன என்பதையும்,

ஒவ்வொரு காணிகள் தொடர்பாக வெவ்வேறாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) 2009.03.31 ஆந் திகதியன்று வரை பகிர்ந்தளிப்பதற்காக (மேட்டு / நீர்ப்பாசனம்) மீதியாக உள்ள காணியின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) கட்டாயம் காணி வழங்கப்பட வேண்டியவர்கள் இனங்காணப்பட்டுள்ளனரா என்பதையும்,

(iii) அவ்வாறெனின் அவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) எந்த காலப்பகுதிக்குள் அவர்களுக்கு காணிகள் வழங்கப்படும் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0459 / '09

2.

கௌரவ பேமசிறி மானகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பாக பெரும் பொறுப்புள்ள தொழிலான சாரதிகளுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குகின்றபோது அது மிகக் கவனமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சாரதி அனுமதிப் பத்திரமொன்றைத் தயாரிக்கும் கேள்விப்பத்திரத்தை ஒப்படைக்கின்றபோது சம்பந்தப்பட்ட கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பாக விழிப்புடனிருக்க வேண்டும் என்பதையும்,

(ii) புதிய சாரதி அனுமதிப்பத்திரத்தை தயாரிக்கும் கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்டுள்ள கம்பனியின் தலைவர், நிதி மோசடி தொடர்பில் தென்னாபிரிக்காவின் நீதிமன்றமொன்றினால் 15 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஒரு நபராவார் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

0482 / '09

3.

கௌரவ வை.எம். நவரத்ன பண்டா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2008 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்கள் அரசாங்க செலவில் வெளிநாட்டு விஜயங்களில் பங்குபற்றினார்களா என்பதையும் ,

(ii) ஆமெனில், அது எந்த நாடுகளுக்கு என்பதையும் ,

(iii) அவ்வாறு பங்குபற்றியதன் நோக்கம் என்னவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) மேற்படி பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் வயது தனித்தனியாக யாதென்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா ?

(இ) மேற்படி விஜயங்களுக்கான மொத்த செலவு எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0545 / '09

4.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— சமூக சேவைகள், சமூகநலநோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்தின் 19 வது பக்கத்தில் (சிங்களமொழி மூலம்) குறிப்பிடப்பட்டுள்ள 'சமுர்த்தி நிவாரண' நிகழ்ச்சித்தி திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்டுள்ளவாறு வயோதிப, மற்றும் அங்கவீனமடைந்த குடும்பங் களுக்கு 3,000 ரூபா மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படுவதன் கீழ் 2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் கண்டி மாவட்டத்தில் வயோதிபர்கள் மற்றும் அங்கவீனமடைந்தவர்கள் எவ்வளவு பேர் இந்த திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளார்கள் என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் கண்டி மாவட்டத்தில் அவ்வாறு இனங் காணப்பட்ட வயோதிப மற்றும் அங்கவீனமடைந்த குடும்பங்களில் எத்தனை குடும்பங்களுக்கு இந்த 3,000 ரூபா மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படுகின்றது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0627 / '09

5.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— தொழில் உறவுகள், மனித வலு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அப்போதைய தொழில் உறவுகள் ,வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சரி னால் 1980 யூலை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட நெசவுத் தேரழிலாளர்களின் நிலுவைச் சம்பளம் செலுத்துதல் தொடர்பில் 06/1540/230/039 ஆம் இலக்க, 2006.08.18 ஆம் திகதிய அமைச்சரவை நிருபம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) நிதி ,திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பின் கீழ் அந்த நிருபம் அமைச்சரவை யினால் அங்கீகரிக்கப்பட்டு மேற்படி கொடுப்பனவுகளை செலுத்தும் படி தெரழில் உறவுகள் மனித வலு அமைச்சுக்கு (அப்போதைய தொழில் உறவுகள், வெளிநாட்டு தொழில் வாய்ப்பு) பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா ?

(இ) அதன் பிரகாரம், 2006 டிசெம்பர் மாத்ததின் ஆரம்பப் பகுதியில் கொடுப்பனவுகள் செலுத்தப்படுவதாக, தொழில் ஆணையாளர் நாயகத்தினால் சரியான உரிமையாளர்கள் இணங்காணப்பட்டு கொடுப்பனவுகளை வழங்குவதற்காக நிலுவைச் சம்பளம் குறிப்பிடப்பட்டுள்ள விசேட சத்தியக் கடுதாசிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) அவ்வாறு சம்பளம் வழங்குவதற்குள்ள சத்தியக் கடுதாசிகளின் எண்ணிக்கை யாதென்பதையும் ,

(ii) அவர்களது பெயர்களும் முகவரிகளும் யாவையென்பதையும் ,

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா ?

(உ) (i) அதற்கிணங்க மேற்படி விடயங்களுக்கேற்ப குறித்த நெசவுத் தொழிலாளர் களின் நிலுவைச் சம்பளத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் ,

(ii) ஆமெனில், அது எப்போதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஊ) இன்றேல், ஏன் ?

0628 / '09

6.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான மாத்தளை – மன்தண்டாவெல - பன்சலை வீதி 20/10 ஆம் இலக்க தொழிலாளர் வீடுகளில் சுமார் 50 ஆண்டுகளாக குடியிருக்கின்ற 03 குடும்பங்களுக்கு அவ் வீடுகளிலிருந்து வெளியேறும்படி கட்டளையிடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தொழிலாளர்களாக கடமையாற்றிய இவர்கள் கடந்த காலத்தில் தமது செலவில் இவ் வீடுகளை திருத்தி, நீர், மின்சாரம் பெற்று கட்டணப் பட்டியல்களையும் செலுத்தியுள்ளார்கள் என்பதோடு வாக்காளர் பெயர் பட்டியலில் பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதென்பதையும் அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(இ) இவர்களுக்கு நியாயம் வழங்கி தொடர்ந்தும் மேற்படி வீடுகளில் குடியிருப்பதற்கு வாய்ப்பளிக்கப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன் ?

0689 /'09

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ ) (i) இன்றைய திகதி வரையிலான கடந்த ஐந்து வருடங்களுக்கான இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் இலாபம் / நட்டத்தினை வருடாந்த அடிப்படையிலும் ,

(ii) கடந்த ஐந்து வருடங்களாக, நிரந்தர மற்றும் தற்காலிக அடிப்படையில் பணியாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையினையும்

அவர் இச் சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) கடந்த ஐந்து வருடங்களுக்கான

(i) புகையிரதத் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்ட திகதிகளையும்,

(ii) வருமானம் மற்றும் செலவினையும்

வருடாந்த அடிப்படையில் அவர் கூறுவாரா?

(இ) இ. பு. தி.யின் மொத்தக் கடனை 2002 முதல் 2008 வரை உள்ளவாறாகவும், 2009ல் இன்றைய திகதி வரை உள்ளவாறாகவும், அவர் குறிப்பிடுவாரா?

(ஈ.) இன்றேல், ஏன்?

0704 / '09

8.

கௌரவ எல். ஜீ. வசந்த பியதிஸ்ஸ,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டுக்காக கிழக்கு மாகாண சபைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது என்பதையும்,

(ii) அவ்வாறு ஒதுக்கப்பட்ட பணத்தில் அம்பாறை மாவட்டத்துக்கு எவ்வளவு பணம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒதுக்கப்பட்ட பணத்தில் கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0731/ '09

9.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களுக்காக நடத்தப்பட்ட மேல் மாகாண சபை தேர்தலின்போது எத்தனை தற்காலிக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன என்பதையும்,

(ii) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) இவ்வாறு தற்காலிக அடையாள அட்டைகளை வழங்குவதற்குப் பதிலாக நிரந்தர அடையாள அட்டைகளை வழங்குவதற்கு எவ்வளவு பணம் செலவாகும் என்பதையும்,

(iv) நிரந்தர அடையான அட்டைகளை வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதையும்,

(v) இந்த நடவடிக்கையை பாராளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0172 / '09

10.

கௌரவ விஜித ரணவீர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திருமதி எம். எம். சுமணாவதி அவர்கள், மாத்தறை தீயகக மேற்கு மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி, 1991.01.01 ஆம் திகதி தொடக்கம் ஓய்வு பெற்றுள்ளளார் என்பதையும்,

(ii) 1988.01.01 ஆம் திகதியிலிருந்து திறன் மற்றும் மூப்புரிமை அடிப்படையில் இவருக்கு அதிபர் தரம் II இற்கு பதவி உயர்வு வழங்கப்பட வேண்டுமென் பதையும்,

(iii) இருப்பினும் இவர் ஓய்வுபெறும் வரை உரிய பதவி உயர்வு வழங்கப்பட வில்லையென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) ஓய்வுபெற்று கடந்த 18 வருட காலப்பகுதியில் திருமதி சுமனாவதியின் பதவி உயர்வையும் ஓய்வூதியத்தையும் தயாரித்து கொள்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி பதவி உயர்வு மற்றும் ஓய்வூதியம் என்பவை தயாரித்துக் கொடுக்கப் படாதமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்,

(ii) சகல தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ள திருமதி சுமனாவதிக்கு உரிய பதவி உயர்வைப் பெற்றுக் கொடுத்து எப்போது ஓய்வூதியம் தயாரித்து வழங்கப் படும் என்பதையும்,

(iii) 78 வயதைக் கொண்ட இவருக்கு, உரிய திணைக்ளத்தின் தாமதத்தின் காரணமாக பதவி உயர்வும் அதற்கான ஓய்வூதியமும் வழங்கப்படாத காலப் பகுதிக்கு நட்டஈட்டுத் தொகையோ வேறு ஏதேனும் கொடுப்பனவோ வழங்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

O460 /'09

11.

கௌரவ பேமசிறி மானகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மோட்டார்வாகன போக்குவரத்து திணைக்களத்தின் உதவி ஆணையாளர் (தொழில்நுட்ப ) பதவிக்கான ஆட் சேர்ப்பு நடைமுறை திருத்தப்பட்டுள்ளதா என்பதையும் ,

(ii) ஆமெனில் அது எப்போதென்பதையும் ,

(iii) அவ்வாறு திருத்தப்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி திருத்தத்தின் பிரகாரம் குறிப்பிட்ட பதவிக்கான ஆட் சேர்ப்பு நடைமுறையானது மோட்டார் வாகன பரிசோதகர்களின் பதவி உயர்வுக்கான நடைமுறையாகும் என்பதையும் ,

(ii) பதவி உயர்வுக்கான நடைமுறையாக இருப்பின் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 2.4 மற்றும் 2.5 வாசகங்களுக்கேற்ப மோட்டார் வாகன ஆணையாளரினால் அமைச்சின் செயலாளர் ஊடாக அமைச்சரவையின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்பதையும்

அவர் அறிவாரா ?

(இ) (i) ஆமெனில், குறிப்பிட்ட அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும் ,

(ii) அது எப்போதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஈ) குறித்த அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படவில்லையெனில் ஆட்சேர்ப்பு நடைமுறை சட்ட விரோதமானதாகும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(உ) (i) ஆமெனில், அதற்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும் ,

(ii) அது எவ்வளவு காலத்துக்குள் நடைபெறும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஊ) இன்றேல், ஏன் ?

0690 / '09

12\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ ) (i) இன்றைய திகதி வரையிலான கடந்த ஐந்து வருடங்களுக்கான இலங்கை மத்திய போக்குவரத்து சபையின் இலாபம்/ நட்டத்தினை வருடாந்த அடிப்படையிலும் ,

(ii) கடந்த ஐந்து வருடங்களாக, நிரந்தர மற்றும் தற்காலிக அடிப்படையில் பணியாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையினையும்

அவர் இச் சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) கடந்த ஐந்து வருடங்களுக்கான -

(i) பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்ட திகதிகளையும்,

(ii) வருமானம் மற்றும் செலவினையும்

வருடாந்த அடிப்படையில் அவர் கூறுவாரா?

(இ) இபோச வின் மொத்தக் கடனினை 2002 முதல் 2008 வரை உள்ளவாறாகவும், 2009ல் இன்றைய திகதி வரை உள்ளவாறாகவும், அவர் குறிப்பிடுவாரா?

(ஈ.) இன்றேல், ஏன்?

0177 / '09

13\.

கௌரவ விஜித ரணவீர,— சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாதோட்டை மாவட்டத்தில் குதிரை வலு 03 க்குக் குறைந்த பல்தொழில் இயந்திரங்களை உபயோகித்து நடத்தப்பட்டு வரும் பதிவு செய்யப்பட்ட தச்சுத்தொழில் கொட்டகைகளின் எண்ணிக்கை யாது?

(ii) இவர்களின் பெயர், முகவரி, கிராம அலுவலர் பிரிவு, பிரதேசச் செயலாளர் பிரிவு, உரிய பிரதேச சபை, பதிவு இலக்கம், தொழிலின் இயல்வபு ஆரம்பித்த ஆண்டு ஆகியவை வெவ்வேறாக யாவை,

(iii) குதிரை வலு 03 க்குக் குறைந்த பல்தொழில் இயந்திரங்களை உபயோகித்து தொழிலில் ஈடுபடும் அனைத்து தச்சுத் தொழிலாளர்களும் சுற்றாடல் உரிமப் பத்திரத்தை வருடாந்தம் பெறவேண்டுமா,

(iv) சுற்றாடல் உரிமப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கான நடைமுறை மற்றும் செலவிட வேண்டிய முழுத்தொகை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குதிரை வலு 03 க்குக் குறைந்த பல்தொழில் இயந்திரங்களுக்கான சுற்றாடல் வரி அறவீடு எப்போது முதல் ஆரம்பிக்கப்பட்டது,

(ii) 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் இவ்வரியை செலுத்தியோர் எண்ணிக்கை யாது,

(iii) தச்சுத் தொழிலாளர்களுக்கு பெரும் செலவுச் சுமையாக உள்ள இவ்வரியை இரத்துச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0461 / '09

14.

கௌரவ பேமசிறி மானகே,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைக்கு வெற்றிடமாகவுள்ள கிராம உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும் ,

(ii) அப்பதவிகளுக்கான ஆட்சேர்ப்பின் போது பின்பற்றப்படுகின்ற நடைமுறை யாதென்பதையும் ,

(iii) மேற்படி ஆட்சேர்ப்புக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றனவா என்பதையும் ,

(iv) ஆமெனில் எந்தக் காலகட்டத்திலென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) கிராம உத்தியோகத்தர் பதவிகளுக்காக நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகள் பெற்றுக்கொண்டவர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0708 / '09

15.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த ஐந்து ஆண்டுகளாக,

(i) இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 10 விவசாய நுகர்வுப் பொருட்களையும்,

(ii) ஆண்டொன்றுக்கு இறக்குமதி செய்யப்படும் அளவை அந்தந்தப் பொருள் வாரியாகவும்,

(iii) இந்தப் பொருட்களின் உள்நாட்டு நுகர்வின் அளவை அவற்றின் உண்மையான உள்நாட்டு உற்பத்தி அளவுடனனும்,

(iv) இந்தப் பொருட்கள் மீது விதிக்கப்படும் தீர்வையின் அளவையும்,

(v) அவற்றை உள்நாட்டில் அதிகளவில் உற்பத்தி செய்யாமைக்கான காரணத்தையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது உர மானியம் வழங்கப்படுகின்றதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், வழங்கப்படும் தொன்களின் அளவை ஆண்டு வாரி யாகவும் பொருள் வாரியாகவும்,

(iii) தற்போது ஊக்குவிப்பு அளிக்கப்படும் வேறு ஐந்து (5) கமத்தொழில் உற்பத்திகளையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

தொழில் உறவுகள், மனிதவலு அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்),— 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தைத் திருத்துவ தற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2009.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி. ப. 3.30 மணிக்கு 7 (5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

3.

கௌரவ கபீர் ஹாஷீம்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"அல் — ஜாமிஅதுல் இஸ்லாமிய்யா அறாபி வித்தியாலயத்தைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

4.

கௌரவ ஆர். எம். ரஞ்ஜித் மத்துமபண்டார,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2) ,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"லக் தெரண அபிவிருத்தி மன்றத்தைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும் ,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 103, நிகழ்ச்சித்திட்டம் 01,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் ஐந்நூற்றி எழுபது மில்லியன் எட்டு இலட்சம் (ரூபா 570, 800, 000.) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | | |
|---|---|---|---|---|
| தலைப்பு: 103 | — பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் அமைச்சு | | | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் : 01 | — நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டம் | | | |
| கருத்திட்டம் : 2 | — அமைச்சு நிர்வாகமும் நிறுவன சேவைகளும் | | | |
| 3 | — அரச புத்தி சேவை | | | |
| 4 | — தேசிய மாணவ வீரர் படையணி | | | |
| | மீண்டுவருஞ் செலவினம் | | ரூ. | 550,000,000 |
| | ஆக்கப் பொருட் செலவினம் | | ரூ. | 20,800,000 |
| | | மொத்தம் | ரூ. | 570,800,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2009, ஒற்றோபர் மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 15 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 30,373,403,938.

*2

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும் ,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 222, நிகழ்ச்சித்திட்டம் 01,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் பத்தொன்பதாயிரத்து அறுநூற்றி எண்பத்தியொரு மில்லியன் (ரூபா 19,681,000,000.) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | | |
|---|---|---|---|---|
| தலைப்பு: 222 | — இலங்கை தரைப்படை, | | | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் : 01 | — நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டம் | | | |
| கருத்திட்டம் : 1 | — பொதுவான நிர்வாகமும் நிறுவனங்கள் சேவையும் | | | |
| 2 | — அனுபவ ரீதியில் பெறாத | | | |
| 3 | — செயற்பாடு | | | |
| 4 | — தொண்டர் படை | | | |
| | மீண்டுவருஞ் செலவினம் | | ரூ. | 18,900,000,000 |
| | ஆக்கப் பொருட் செலவினம் | | ரூ. | 781,000,000 |
| | | மொத்தம் | ரூ. | 19,681,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2009, ஒற்றோபர் மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 16 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 30,944,203,938.

*3

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும் ,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 223, நிகழ்ச்சித்திட்டம் 01,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் ஏழாயிரத்து முன்னூற்றி எழுபத்தி நான்கு மில்லியன் மூன்று இலட்சம் (ரூபா7,374,300,000.) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | | |
|---|---|---|---|---|
| தலைப்பு: 223 | | — இலங்கை கடற்படை, | | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் : 01 | | — நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டம் | | |
| கருத்திட்டம் : | 1 | — பொதுவான நிர்வாகமும் நிறுவனங்கள் சேவையும் | | |
| | 2 | — கடல்சார் படை நடவடிக்கைகள் | | |
| | 3 | — வழங்கள், ஏற்பாடுகள், இயந்திர மற்றும் ஏனைய இணைந்த சேவைகள் | | |
| | 4 | — தொண்டர் படை | | |
| | | மீண்டுவருஞ் செலவினம் | ரூ. | 5,974,300,000 |
| | | ஆக்கப் பொருட் செலவினம் | ரூ. | 1,400,000,000 |
| | | மொத்தம் | ரூ. | 7,374,300,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2009, ஒற்றோபர் மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 17 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 50,625,203,938.

*4

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும் ,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 224, நிகழ்ச்சித்திட்டம் 01,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை

சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் இரண்டாயிரத்து தொழாயிரத்து ஐம்பது மில்லியன் (ரூபா2,950,000,000.) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | | |
|---|---|---|---|---|
| தலைப்பு: 224 | — | இலங்கை விமானப்படை, | | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் : 01 | — | நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டம் | | |
| கருத்திட்டம் : 1 | — | பொதுவான நிர்வாகமும் நிறுவனங்கள் சேவையும் | | |
| | | மீண்டுவருஞ் செலவினம் | ரூ. | 200,000,000 |
| | | ஆக்கப் பொருட் செலவினம் | ரூ. | — |
| | | மொத்தம் | ரூ. | 200,000,000 |
| கருத்திட்டம் 2 | — | விமான, தரை மற்றும் யுத்தம் தவிர்ந்த நடவடிக்கைகள் | | |
| | | மீண்டுவருஞ் செலவினம் | ரூ. | 1,150,000,000 |
| | | ஆக்கப் பொருட் செலவினம் | ரூ. | 300,000,000 |
| | | மொத்தம் | ரூ. | 1,450,000,000 |
| கருத்திட்டம் 3 | — | பொறியியல், வழங்கள் சேவைகள் | | |
| | | மீண்டுவருஞ் செலவினம் | ரூ. | 925,000,000 |
| | | ஆக்கப் பொருட் செலவினம் | ரூ. | 375,000,000 |
| | | மொத்தம் | ரூ. | 1,300,000,000 |
| | | முழு மொத்தம் | ரூ. | 2,950,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2009, ஒற்றோபர் மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 18 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 57,999,503,938.

*5

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும் ,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 225, நிகழ்ச்சித்திட்டம் 01,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த

நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் ஆயிரத்து அறுநூற்றி நாற்பது மில்லியன் (ரூபா1,640,000,000.) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு: 225 | — பொலிஸ் திணைக்களம் | | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் : 01 | — நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டம் | | |
| கருத்திட்டம் : 2 | — சட்ட அமுலாக்கம் | | |
| | மீண்டுவருஞ் செலவினம் | ரூ. | 1,640,000,000 |
| | | ரூ. | 1,640,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2009, ஒற்றோபர் மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 19 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 60,949,503,938.

*6

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும் ,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 320, நிகழ்ச்சித்திட்டம் 01,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் ஆயிரத்து அறுநூற்றி முப்பது மில்லியன் ஐந்து இலட்சம் (ரூபா 1,630,500,000.) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு: 320 | — சிவில் பாதுகாப்புத் திணைக்களம் | | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் : 01 | — நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டம் | | |
| கருத்திட்டம் : 1 | — கிராமியப் பாதுகாப்பு திட்டத்தை அமுலாக்கள் | | |
| | மீண்டுவருஞ் செலவினம் | ரூ. | 1,500,500,000 |
| | ஆக்கப்பொருட் செலவினம் | ரூ. | 130,000,000 |
| | மொத்தம் | ரூ. | 1,630,500,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2009, ஒற்றோபர் மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 20 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 62,589,503,938.

7.

இலங்கை பொருளியற் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

8.

புலத்திசி தறுவோ மன்ற நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

9.

சிறிநிவெஸ் பிரஜாமித்ர சஹயோகியதா கேந்திரம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

10.

ஹெம்டன் விலேஜ் இலங்கை நம்பிக்கைப் பொறுப்புச்சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

11.

மாளிகாவத்தை ஜனாஸா மற்றும் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

12.

கிராமிய வேலையாட்கள் மற்றும் ஒன்றிணைந்த கிராமிய வளங்கள் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

இலங்கை புற்றுநோய் ஆராய்ச்சி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

சமூக நிவாரண மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

15.

பிரேமதாச ஹேகொட மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

*16.

நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 123, நிகழ்ச்சித்திட்டம் 2 ,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் ஆயிரத்து எழுநூற்றி பதினைந்து மில்லியன் (ரூபா 1,715,000,000) ரூபாவிற்கும் மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு: 123 | — நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சு | | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் : 02 | — அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | | |
| | ஆக்கப்பொருட் செலவு | ரூ. | 1,715,000,000 |
| | | ரூ. | 1,715,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, செத்தெம்பர் மாதம் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 13 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 20,780,903,938.

*17

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும் ,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 105, நிகழ்ச்சித்திட்டம் 02 ,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் ஏழாயிரத்து எண்ணூற்றி எழுபத்தியேழு மில்லியன் ஐந்து இலட்சம் (ரூபா7,877,500,000.) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு: 105 | — தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு | | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் : 02 | — அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | | |
| கருத்திட்டம் : 10 | — வெளிநாட்டு உதவி அபிவிருத்தித் திட்டம் | | |
| | ஆக்கப்பொருட் செலவினம் | ரூ. | 7,877,500,000 |
| | | ரூ. | 7,877,500,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

